# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜனவரி 22, 2022

Weekly E-paper ● January 22, 2022




## வீரர்களை ஏற்க
## கோழைகள் தயங்குதல் வியப்பில்லை!

கா.சு.நாகராசன்

**பேரவை 15**

சுப.வீரபாண்டியன்

**50:50**

தலையங்கம்

**தொடர்கிறது மொழிப் போராட்டம்!**

பொள்ளாச்சி மா. உமாபதி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜனவரி 22, 2022

Weekly E-paper ● January 22, 2022


# வீரர்களை ஏற்க கோழைகள் தயங்குதல் வியப்பில்லை!

**கா.சு.நாகராசன்**



புது தில்லி செங்கோட்டை ராஜபாதையில் இந்திய ஒன்றிய மாநிலங்களின் சார்பில் அலங்கார ஊர்திகள் அணிவகுக்க, முப்படையினரின் வலிமையைப் பறை சாற்றும் சாகச நிகழ்ச்சிகளோடு இந்தியக் குடியரசு நாள் விழா ஒவ்வோர் ஆண்டும் சனவரி 26ஆம் நாள் கொண்டாடப்படும்.

மாநில அரசுகள் தங்கள் இன, மொழி, வரலாற்று அடையாளங்களை அலங்கார ஊர்திகளில் தத்ரூபமாக வடித்து தங்கள் தேசிய இன அடையாளத்தை டில்லி ராஜாக்களுக்கு எடுத்துக் காட்டுவார்கள்.

இந்திய அரசு என்று ஓர் அரசு இருக்கிறதே தவிர அந்த அரசுக்கு என்று தனியாக நிலப்பரப்போ மக்களோ கிடையாது. பல தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்தியப் பெரு நிலப் பகுதியில் மாநில அரசுகளோடு ஒன்றி பொது வேலைத்திட்டங்களோடு செயல்படக்கூடிய அரசாகவே ஒன்றிய அரசு சட்டப்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், மாநில அரசுகளோடு ஒன்றி இருப்பதற்கு இந்திய அரசு எப்போதும் ஒப்புக் கொண்டதே இல்லை. மாறாக மாநில அரசுகளைத் தனது ஆளுகைக்கு உட்பட்ட காலனி அரசுகளாக நடத்தி மேலாதிக்க இன்பம் காண்பதிலேயே ஒன்றிய ஆட்சியாளர்கள் எப்போதும் முனைப்பாக இருந்திருக்கிறார்கள், இப்போதும் இருக்கிறார்கள்.

எனவே, மாநில மக்களுக்கு ஒன்றிய ஆட்சியாளர்கள் மீதும் ஒன்றியக் கட்சிகள் மீதும் பெரிய நம்பிக்கையோ, பற்றோ, பிடிமானமோ இருந்ததில்லை. காரணம் தங்களை மதிக்காத ஒன்றியக் கட்சிகள், ஆட்சிகள் மீது மக்கள் ஏன் நம்பிக்கையோ மதிப்போ வைக்கப் போகிறார்கள்?

அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு எப்போதும் ஒன்றிய ஆட்சியாளர்களால் துன்பமே மிகுந்து இருக்கும் போது நமக்கும் விருப்பு எப்படி இருக்கும்? வெறுப்புதான் இருக்கும்!



இதிலே பரிதாபத்திற்கு உரியவர்கள் இப்போதைய ஒன்றிய ஆட்சியின் கட்சிக்காரர்கள்தான். தமிழ்நாட்டு தட்ப வெப்பம் இவர்களுடைய இந்து, இந்தி, இந்திய பக்தியை எள்ளளவும் ஏற்காத ஒன்றாகவே இருந்து வருகிறது.

இமய மலையில் இருந்து குமரிக்கடல் வரை ஆங்கிலேய ஆதிக்கத்தில் இருந்த காலத்திலேயே ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று வெஞ்சமரில் சாதல் கண்ட வீரஞ்செறிந்த பூமி தமிழர் பூமி. ஆனால், இந்திய விடுதலைப் போராட்டம் என்கிற வரலாற்றை 1857ஆம் ஆண்டு மீரட்டில் நடந்த சிப்பாய்க் கலகத்தில் இருந்து எழுதுகிறது இந்தியா.

ஆனால், இந்த சிப்பாய்கள் எல்லாம் வெள்ளை அதிகாரிகளின் கட்டளைக்கு அடிபணிந்து சேவகம் செய்து கொண்டிருந்தவர்கள் என்பதும் இவர்களிடையே தூண்டிவிடப்பட்ட மத உணர்வின் காரணமாகத் தங்கள் எசமானர்களை எதிர்த்துக் கலகம் செய்திருக்கிறார்கள் என்பதும் அவர்களே மறைக்கமுடியாத ஆவணமாக இருக்கிறது.

நேற்றுவரை கட்டளைக்கு அடிபணிந்து செயல்பட்டவன் இன்று கட்டளையை மீறுவது அல்லது கட்டளையிடுபவனுக்கு எதிராகச் செயல்படுவது என்பது ஒருவகை கிளர்ச்சிதான். ஆனால், இந்தக் கிளர்ச்சியையே விடுதலைப் போராகச் சித்தரிக்க முயலுகிறவர்களுக்கு நம்மிடையே சில கேள்விகள் இருக்கின்றன.

1857-இல் நடந்த சிப்பாய்க் கலகத்திற்கு 51 ஆண்டுகள் முன்பாகவே, வேலூர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த மைசூர் புலி திப்புசுல்தானின் மகன்களும், படையினரும் திட்டமிட்டு ஆங்கிலேயப் படைகளைத் தாக்கியழித்தனர்.

1806 சூலை 10ஆம் நாள் நடைபெற்ற இப்புரட்சி ஒரே நாளில் அடக்கப்பட்டது என்றாலும் சிறைக்குள் இருந்தபடி படைதிரட்டி, கிடைத்த ஆயுதங்களுடன் போரிட்டு வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற புரட்சிகர நிகழ்வைப் புறந்தள்ளிவிட்டு அதன் பிறகு அரை நூற்றாண்டு கழித்து நடந்த ஒரு கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் என்று வரலாற்றைத் திரிப்பது ஒன்றிச் செயல்படுகிற தன்மைக்குப் புறம்பான ஒன்றா இல்லையா?

வேலூர் புரட்சிக்கு ஓராண்டுக்கும் முன்பு சூழ்ச்சியால் கைது செய்யப்பட்டு 1805 சூலை 31ஆம் நாள் தூக்கிலிடப்பட்ட தீரன் சின்னமலை, ஈரோடு காவிரி ஆற்றின் கரையில் 1801ஆம் ஆண்டும் ஓடாநிலையில் 1802ஆம் ஆண்டும் அறச்சலூரில் 1804ஆம் ஆண்டும் என இடையறாத போரில் ஆங்கிலேயப் படைகளை விரட்டியடித்தானே, அது விடுதலைப் போரில் சேருமா? சேராதா?

1801ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் நாள் ‘ஜம்புத் தீவு பிரகடனம்’ என்ற பெயரில் திருச்சி திருவரங்கத்திலிருந்து வெளியிட்ட அறிக்கை மூலம் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒருங்கிணைந்த போருக்கு அறைகூவல் விடுத்துப்

தொடர்ச்சி 2ஆம் பக்கம்...

# பேரவை 15

**சுப. வீரபாண்டியன்**

2006 ஆம் ஆண்டின் இறுதியில், சென்னை, தியாகராய நகர் பள்ளி ஒன்றில் பலரும் கூடி நடத்திய கலந்துரையாடலின் இறுதியில், "திராவிட இயக்கத் தமிழர் பேரவை" என்னும் ஓர் அமைப்பினை ஏற்படுத்துவது என்று முடிவானது. தமிழ் இன, மொழி மேம்பாடு, சமூக நீதி, பகுத்தறிவு ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு கொள்கையறிக்கையை உருவாக்குவது என்றும், ஜனவரியில் அந்த அமைப்பை முறைப்படி தொடங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அவைத்தலைவராக அய்யா கயல் தினகரனும், துணைத் தலைவராக சாவல்பூண்டி சுந்தரேசனும், பொதுச் செயலாளராக நானும் (சுப. வீரபாண்டியன்), பொருளாளராகத் திரைப்பட இயக்குனர் செல்வபாரதியும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். திமுகவில் உள்ளவர்களும் இவ்வமைப்பில் இணையலாம் என்னும் இரட்டை உறுப்பினர் முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அத்தீர்மானத்தின் அடிப்படையில், திமுக தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளோடு, 22.01.2007 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கில், இனமானப் பேராசிரியர் அவர்களால் பேரவை தொடக்கி வைக்கப்பட்டது.

15 ஆண்டுகளை நிறைவு செய்து, இன்று 16ஆவது ஆண்டில் பேரவை அடியெடுத்து வைக்கிறது.




பேரவைக்கென்று ஓர் இதழ் வேண்டும் என்ற முடிவில், 26.07.2007 அன்று "கருஞ்சட்டைத் தமிழர்" என்னும் மாத இதழ் தொடங்கப்பட்டது. முதல் இதழை, சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில், அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர், இன்றைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இப்போது அவ்விதழ் மின்னிதழாக வெளிவந்து கொண்டுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து பேரவை செயல்பட்டு வருகின்றது. 2017ஆம் ஆண்டுக்குப் பிறகு, பேரவையின் வளர்ச்சி அடுத்தடுத்தக் கட்டங்களுக்கு நகர்ந்தது. குறிப்பாக, கருஞ்சட்டைப் பதிப்பகம், திராவிடப் பள்ளி, ஒடுக்கப்பட்ட சமூக மாணவர் கல்வி உதவித் திட்டம் ஆகியன சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அண்மையில் கோவையில் நடைபெற்ற இணைப்பு மாநாட்டில், தமிழ்நாடு திராவிடர் கழகம் தன்னைப் பேரவையுடன் இணைத்துக் கொண்டது. தமிழ்நாட்டில் உள்ள மேலும் பல தமிழ், திராவிட அமைப்புகள் பேரவையுடன் இணைவது குறித்துப் பேசி வருகின்றன.

திராவிடக் கருத்தியலைத் தமிழ்நாடு முழுவதும் பரப்புவதில் நம் பேரவை தன்னாலியன்ற அனைத்துப் பணிகளையும் செய்து வருகின்றது.

இயன்றதைச் செய்வோம், இடைவிடாது செய்வோம் என்ற நோக்கில், தொடர்ந்து பயணிக்கும் நம் பேரவை, மென்மேலும் வளரும், திராவிடத்தின் கொடி உயரும்! ●

---

## 1ஆம் பக்க தொடர்ச்சி...

*படை நடத்தி அதே ஆண்டு அக்டோபர் 24ஆம் நாள் திருப்பத்தூர் கோட்டையில் தூக்குக் கயிற்றில் வீரமரணம் தழுவிய மருது சகோதரர்கள் விடுதலைப் போராளிகள் பட்டியலில் சேர மாட்டார்களா?*

*ஆங்கிலப்படை தன் கணவனைக் கொன்று கைப்பற்றிய சிவகங்கைச் சீமையை மீட்க ஹைதர்அலியின் துணையோடு பெரும்படை திரட்டி ஆங்கிலேயரை விரட்டி அடித்துவிட்டு அரசவையின் ராணியாக விளங்கிய வேலுநாச்சியாரும், வேலு நாச்சியார் படையின் தற்கொலைப் போராளியாக வெள்ளையரைச் சிதறடித்த குயிலியும், 1799ஆம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியில் பெரும் போரைச் சந்தித்து அதே ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் கயத்தாரில் தூக்கிலிடப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மனும், ஊமைத்துரையும், வீரன் சுந்தரலிங்கமும் நடத்தியது விடுதலை போர்களா இல்லையா?*



*இதை எல்லாம் கடந்து வெள்ளையருக்கு எதிராக சுதேசி வணிகம் என்ற பெயரில் கப்பலோட்டிய தமிழன் வஉசி நடத்தியது விடுதலைப் போராட்டம் இல்லையா ?*

*வஉசி செக்கிழுத்தும் கல்லுடைத்தும் சிறையிலே சித்திரவதை செய்யப்பட்டது வரலாற்றிலே பேசக்கூடாததவையா?*

*இவற்றில் எந்தக் கேள்விக்கும் 'ஒன்றா' அரசிடமிருந்து பதில் வரப்போவதில்லை என்பது நமக்குத் தெரியும். அதேநேரம் இந்து - இந்தி - இந்திய மயக்கத்தில் ஆழ்த்தப்படுகிற இளைஞர்களுக்கு வரலாற்று உண்மைகளை எடுத்துக்காட்டவே இந்தக் கேள்விகளை முன்வைக்கிறோம்.*

*ஒவ்வோரு ஆண்டும் சனவரி 26 குடியரசு நாளில் தில்லி செங்கோட்டை ராஜபாதையில் வலம் வருகிற அலங்கார ஊர்திகளில் இப்படியான வரலாறுகள்தானே வலம் வரத் தகுதியாக இருக்க முடியும்!*

*ஆனால், ஆங்கிலேயே அரசுக்கு சேவகம் செய்தும், தயவு பெற்றும் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர்கள், ஆங்கிலேய அரசுக்கு எதிரான போராட்டங்களைக் காட்டிக் கொடுத்தவர்கள், அடக்குமுறை கண்டு அஞ்சி மன்னிப்புக் கடிதங்களால் மண்டியிட்டு உயிர்ப்பிச்சை கேட்டவர்கள் என்று நீளுகிற பட்டியலின் வாரிசுகளுக்கு, வீரபாண்டிய கட்டபொம்மனும், மருது சகோதரர்களும், வேலுநாச்சியாரும், தீரன் சின்னமலையும், கப்பலோட்டிய தமிழன் வ உ சி யும் ஏற்புடையவர்களாக மாட்டார்கள் என்பதுதானே உண்மை!*

*அதனால்தான் ராஜபாதை அலங்கார அணிவகுப்பில் இந்த மாவீரர்கள் மறுதலிக்கப்பட்டுள்ளனர்.*

*ஆனால், தமிழ்நாட்டின் ஆட்சியிலிருந்து அடிமைகள் அகற்றப்பட்டு சுயமரியாதை அரியணை ஏற்றப்பட்ட காரணத்தால், டில்லிப் பட்டணத்தில் ஏற்க மறுத்த எம்மாவீரர்களின் அணிவகுப்பை செந்தமிழ் நாட்டில் நகர்வலம் விடுவோம் என்று ஓங்கி முழங்கியிருக்கிறார் தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.*

*ஆம்! சனவரி 26 அன்று தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம், பட்டிதொட்டியெங்கும், நாடு நகரமெல்லாம் வேலுநாச்சியாரும் தீரன் சின்னமலையும் கப்பலோட்டிய தமிழனும் ஊர்வலம் செல்லட்டும்!*

*'வீரம் நாம் கேட்ட தாலாட்டு, மரணம் நாம் ஆடிய விளையாட்டு!' என்கிற வரலாற்றை டில்லியின் செவிகளில் அறைந்து சொல்வோம்! அணிவகுப்போம்! தமிழனென்று சொல்லுவோம்! தலை நிமிர்ந்து நிற்போம்!* ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## 50:50



தமிழகத்தில் 21 மாநகராட்சி மேயர் பதவிகளில் பெண்களுக்கு 11 பதவிகள் ஒதுக்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் அரசியல் அதிகாரப் பகிர்வில் பெண்களின் பங்கு என்பது வளர்ந்த நாடுகளில் கூட குறைவாகவே இருக்கின்றது. உலகச் சூழல் இப்படி இருக்க, பெண்களுக்கு 50 சதவீத மேயர் பதவிகளை ஒதுக்கியதன் மூலம் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் சமூக நீதியில் மற்றும் ஒரு சரித்திரம் படைத்திருக்கிறார். இந்த அரசாணை என்பது, ஒரு நூற்றாண்டுக்கு முன்பு நீதிக்கட்சி பெண்களுக்கு வாக்குரிமை அளித்த நிகழ்வைப் போன்று வரலாற்றில் பதியக்கூடிய நிகழ்வாகும்.

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையான பெண்விடுதலை - பாலினச் சமத்துவத்தை, அரசியல் அதிகாரப் பகிர்வு என்னும் இந்த அரசாணை மூலம் நிலைநாட்டி இருக்கிறது தி.மு.கழகம்.

பெண்களுக்கான அரசியல் என்பது வாக்கு வங்கியாக உருவெடுக்காத நிலையிலும், தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், இன்று முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் பெண் விடுதலைக்கான அடுத்த கட்ட நகர்வை முன்னெடுத்து இருக்கிறார்.

பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலும், அது முன்னேறிய சமூகங்களுக்கு மட்டும் சென்றுவிடாமல், ‘ஆதிதிராவிடர்’ பட்டியல் சமூகப் பெண்களுக்குச் செல்லும் வகையில் மாநகராட்சிப் பதவிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதும் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

எந்தக் குறையும் சொல்ல முடியாமல் எதிர்க்கட்சிகளே பாராட்டத் தொடங்கியிருக்கின்றன.

குறை மட்டுமே காணும் எதிர்க்கட்சிளே பாராட்டும்போது, சமூக நீதிக்காகத் தொடர்ந்து குரல் எழுப்பும் அனைத்து முற்போக்கு இயக்கங்களும் முதல்வரின் சமூக நீதிக்கான நடவடிக்கைகளைக் கொண்டாடும் நேரம் இது!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**

தொலைபேசி: 044-2472 6408

**கருஞ்சட்டைப் பதிப்பகத்தின்**
**புதிய வெளியீடுகள்**



₹70/-



₹110/-



₹200/-



₹150/-



₹70/-



₹100/-



₹200/-

**தொடர்புக்கு**
*81229 46408, 044-24726408*
*Web: www.karunchattaibooks.com*
*mail: karunchattaibooks18@gmail.com*
120 என்.டி.ராமாராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

# தொடர்கிறது மொழிப் போராட்டம்!

பொள்ளாச்சி மா. உமாபதி

இந்தி எதிர்ப்பு என்பது ஏதோ ஒரு மொழிக்கு எதிரான உணர்வு அல்ல. அது ஆதிக்கத்தின் எதிர்ப்பு!

1920,30களுக்குப் பின்னர் நீதிக் கட்சி ஆட்சியின் மூலம் கிடைக்கப் பெற்ற கல்வி உரிமையின் மூலம் முதல் தலைமுறையாகக் கற்கத் தொடங்கியத் தமிழர்கள், தாய் மொழி தமிழுடன் ஆங்கிலத்தையும் கற்கத் தொடங்கிய நேரத்தில் அவற்றோடு இந்தியையும் கட்டாயமாகப் படிக்க அன்றைய முதல்வர் ராஜகோபாலாச்சாரியார் ஆணையிட்டார். தலைமுறை தலைமுறையாக சமஸ்கிருத வேதக் கல்வி கற்பதைக் குலத் தொழிலாகக் கொண்ட பார்ப்பனர்களுக்கு சமஸ்கிருதத்தின் மாற்று வடிவமான இந்தி கற்பது கடினம் அல்ல. ஆனால் முதல் தலைமுறையாகத் தமிழையும் ஆங்கிலத்தையும் கற்று அதற்குமேல் இந்தியையும் கட்டாயப்படுத்தினால் அவர்கள் படிப்பே வேண்டாம் என்று மீண்டும் ஆடு மாடு மேய்க்கச் சென்று விடுவார்கள் என்று ஆச்சாரியார் எதிர்பார்த்தார்.

ஆச்சாரியாரின் சூதுமதியை அறிந்ததோடு ஆதிக்க இந்தி திணிப்புக்கு எதிராகத் தந்தை பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினார். போராட்டக் களத்தில் தமிழ்க்கடல் மறைமலை அடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ் காவலர் கிஆபெ விசுவநாதம் போன்ற தமிழறிஞர்களை முன்னிறுத்தினார். அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரியைத் திருச்சியிலிருந்து சென்னை வரையில் இந்தி எதிர்ப்புப் பிரச்சார நெடும்பயணம் செய்யத் தமிழர் பெரும்படையை நடத்தச் செய்தார். ஆண்கள் மட்டுமன்றி தாய்மார்களையும் திரட்டி போராட்டக்களத்தில் ஈடுபடுத்தினார். பலநூறு தாய்மார்கள் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றனர். இக்'குற்ற'ங்களைச் செய்ததால் தந்தை பெரியாருக்குப் பெல்லாரி சிறையில் கல்லுடைக்கும் கடும் தண்டனை வழங்கப்பட்டது. இந்தி எதிர்ப்புப் போர்க்களத்தில் நடராசனும், தாளமுத்துவும் முதல் களப்பலியாகினர். போராட்டத்தின் விளைவாகக் கட்டாய இந்தி திரும்பப் பெறப்பட்டது.



வெள்ளையர் ஆட்சியில் தொடங்கிய இந்தித்திணிப்பு, நாடு விடுதலை அடைந்த பின்னரும் 1948, 1952, 1965, 1986 என்று தொடர்ந்து கொண்டே இருந்தது. அனைத்து நிலைகளிலும் திமுகழகம் இந்தித் திணிப்பை எதிர்த்து கடுமையாகப் போராடி வந்தது. குறிப்பாகத் தலைவர் கலைஞர் அவர்களின் பங்கு மகத்தானது.

1938ஆம் ஆண்டு 14 வயது மாணவராக இருந்த நேரத்தில் சக மாணவர்களைத் திரட்டி இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினார் அவர். 1948ஆம் ஆண்டு திருமணக் கோலத்தில் இருந்த கலைஞர் மணவிழாவை விட்டு அவ்வழியே சென்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்கேற்றார். 1952ஆம் ஆண்டு இந்தி எழுத்துகளைத் தார்பூசி அழிக்கும் போராட்டத்திதில் ராவிடர் கழகமும், தி.முகழகமும் ஈடுபட்டபோது திருச்சியில் புகைவண்டி நிலையத்தில் தந்தை பெரியாரும் அஞ்சல் நிலையத்தில் தலைவர் கலைஞரும் இந்தி எழுத்துகளை தார்பூசி அழித்தனர். 1965ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் தேசியப் பாதுகாப்புக் கொடிய சட்டத்தில் கைது செய்யப்பட்டுப் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தியை இந்தியாவின் அலுவல் மொழியாக ஏற்பதற்கு எந்தவித நியாயமான காரணமும் கிடையாது. முதலில் அம்மொழி பெரும்பான்மையான மக்களால் பேசப்படும் மொழி என்பதே ஒரு மிகப்பெரிய பொய்.

வட இந்தியாவில் பேசப்படும் பிகாரி, பிரஜ் பாஷா, புந்தேல்கண்டி, போஜ்புரி, பிரதாப்கர், ஆவ்தி, கன்னோஜி, கடுவாலி, குமோனி, ஹரியானி, ராஜஸ்தானி மொழிகளை எல்லாம் இந்தி மொழி பேசுவோரின் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் இந்தி பெரும்பான்மையான மக்களால் பேசப்படுவதாகக் கதை அளக்கின்றார்கள்.

இந்தியை அலுவல் மொழியாக ஏற்றால் வட இந்தியாவில் வேலை வாய்ப்பு கிட்டும் என்பது மற்றொரு பொய். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட, பட்டம் பெற்றவர்கள் கூட தமிழகத்தின் வீதிகளில் சோன் பப்டி, பானி பூரி, பூட்டு, போர்வை போன்றவற்றை வணிகம் செய்வதைக் காண்கின்றோம். அங்கே வேலை இருந்தால் அவர்கள் இங்கே ஏன் வருகிறார்கள்? அதுமட்டுமல்ல லட்சக்கணக்கில் வட இந்தியர்கள் தமிழ்நாட்டில் கட்டட வேலை பின்னலாடைத் தொழில் உள்ளிட்ட உடல் உழைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருவதைப் பார்க்கின்றோம்.

இந்தியை அலுவல் மொழியாக ஏற்பது என்பது ஆதிக்க இந்'தீ' யைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மட்டுமே நன்மை பயப்பதாகும். இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களை இரண்டாம்தரக் குடிமக்கள் ஆக்குவதற்கு வழிவகுத்துவிடும். இது நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உகந்தது அல்ல.

எத்தனை நியாயமான காரணங்களை அடுக்கி வைத்தாலும், அவற்றையெல்லாம் புறக்கணித்து இந்தி மொழியைத் திணிப்பதில் ஒன்றிய பாஜக அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. பாஜகவின் நோக்கம் இந்தியை முன்னிலைப்படுத்துவது மட்டுமல்ல; எதற்கும் எவருக்கும் பயன்படாத செத்துப்போன சமஸ்கிருதத்தை அரியணையில் அமர்த்தி அழகு பார்க்க அவர்கள் துடிக்கிறார்கள். அதற்கு முன்னோடியாகத்தான் இந்தியை முதன்மைப் படுத்துகின்றனர். ஒன்றிய அரசின் திட்டங்கள் அனைத்துக்கும் இந்தியிலேயே பெயர் சூட்டி பயன்படுத்துகின்றனர்.

அதுமட்டுமல்ல தமிழகத்தில் உள்ள வங்கிகளில் பயன்படும் சலான்களில் பெரும்பாலும் ஆங்கிலமும் இந்தியும்தான் இருக்கின்றன. மாநில மொழியான தமிழ் இருப்பதில்லை.

1965ஆம் ஆண்டு தமிழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட அந்த மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் தணல் இன்னமும் தமிழ்நாட்டில் கனன்று கொண்டுதான் இருக்கிறது.

மொழிப்போர்த் தியாகிகளை நெஞ்சில் ஏந்துவோம்! இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்போம் !

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian